முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1373

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

03.07.2023, திங்கட்கிழமை

1. ஞானச்சுடராக உலகோர்க்கு
   ஞானம் அருளுகின்ற ஆறுமுக அரங்கா
   தானதர்மத்தைக் கொண்டு உலகமெங்கும்
   தனிப்பெருங்கருணையாக விளங்குகின்ற ஞானதேசிகா
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
   ஆசியதும் சோபகிருது மிதுனத் திங்கள்
(சோபகிருது வருடம் ஆனி மாதம் 18 ம் நாள், 03.07.2023, திங்கட்கிழமை)
   அரங்கனுக்கு சக்தி கூட எடுத்துரைப்பேன்
3. உரைக்கவே அரங்கன் அவதாரம்
   உலகமாற்ற நிகழ்வாக இருக்க
   கறைபடா தர்மம் உலகமெங்கும்
   கருணையோடு அரங்கன் பேரில் வளர்ந்துவர
4. வருகின்ற இந்த தர்மத்தின் கிளைகள் தான்
   வையகத்தை ஞானசக்தி வகையில் கொண்டுவந்து
   தருகின்ற குணத்தை உலகோர்க்கு
   தயவாக சன்மார்க்க வழியாக
5. ஆகவே உருவாக்கி அற்புதங்கள்
   அகிலமெங்கும் ஞான மாற்றமாக நடந்தேறும்
   வகைபட இந்த சூட்சுமத்தை
   வரமாக அரங்கன் தன்கரம்பட தீட்சையாகத் தர
6. தருகவே அன்னதனால் உலகோர்
   தக்கபடி பிரணவக்குடில் நாடி
   தவராஜனிடம் தீட்சையாக ஆற்றல்பெற்று
   தட்டாது உலகமெங்கும் அரங்கன் புகழை

7. தரணிக்கு நன்மை அடையும் வண்ணம் எடுத்துச்செல்ல
செல்லவே அகிலமெங்கும் ஏற்க
சிவராஜயோகி அரங்கன் தயவாலே
வல்லமைமிக்க தேசங்களும் வந்து வழிவிட்டு அரங்கன் திருவடிபற்றி

8. பற்றியே உலகமாற்றம் வேண்டி
பழுதின்றி சரணாகதி பூரணமாக கொண்டு இனிதே
தர்மவான் அரங்கன் தலைமையிலே
தரணியெங்கும் ஞான ஆட்சி மலரக்கூடும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–